Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.395/2019

**Depositions of PW- 4**

| Name | திரு.முருகராஜ் | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | முத்தையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of March 2026.

06.03.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் என்பவரும் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் ரமேஷ் என்பவரும் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கின் காலதாமதத்தை கருத்தில்கொண்டு அவர்கள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 05.08.2017 ஆம் தேதி 08.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் நிலைய பொறுப்பில் இருந்தபோது சங்கரலிங்கம் மகன் பொன் தினேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிறைய குற்ற எண்.497/2017 பிரிவு.379 இதச ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் மனு அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **முதல் தகவல் அறிக்கை அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் மனுவையும் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

மேல் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் ரமேஷ் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். பின்பு இவ்வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் ரமேஷ் அவர்கள் மேல்

விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 05.08.2017 ஆம் தேதி 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ராஜ சங்கரலிங்கம், வினோத் பாபு, ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் அசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு சாட்சிகள் பொன்தினேஷ், சக்தி பாலு, ராஜ சங்கரலிங்கம், வினோத் பாபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

சாட்சிகள் வாக்குமூலங்களில் இருந்து சம்பவம் உண்மை என தெரிந்தபடியால் காணாமல் போன இருசக்கர வாகனத்தை தேடி வந்த நிலையில் 05.08.2017 ஆம் தேதி 11.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் ரமேஷ் மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் திருவில்லிபுத்தூர் டு மதுரை ரோட்டில் உள்ள பட்டத்தரசி அம்மன் கோவில் அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கு இடமான சிவப்பு கலர் இரு சக்கர வாகனத்தை உருட்டிக்கொண்டு வந்த பின்னால் விசாரித்து தெரிந்த வைரமுத்து, மாரிச்செல்வம், சதீஷ்குமார் ஆகிய மூன்று நபர்கள் போலீஸ் பார்ட்டியை பார்த்ததும் வண்டியை திருப்பியவர்களை பிடித்து விசாரிக்க மேற்படி வழக்கில் காணாமல் போன TN 67 AT 3678 என்று எண் கொண்ட yamaha fazar Red colour இருசக்கர வாகனத்தை திருடி எடுத்து வந்ததாக கூறியதால் மேற்படி எதிரிகளை 11.00 மணிக்கு கைது செய்து அதில் வைரமுத்து என்பவரை விசாரித்த போது எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தைகளுமின்றி அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். 11.15 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குருராகவேந்திரன் மற்றும் லட்சுமணன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் 05.08.2017 ஆம் தேதி 12:30 மணிக்கு அதை சாட்சிகள் முன்னிலையில் மேற்படி வாகனத்தை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியுள்ளார். **அத்தாட்சி அசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **மேற்படி TN 67 AT 3678 இருசக்கர வாகனம் சாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி சாட்சிகள் குருராகவேந்திரன் மற்றும் லட்சுமணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து உரிய பதிவுகளுக்கு பின்பு எதிரி வைரமுத்து

தக்கவழி காவல் மூலம் நீதிமன்ற காவல் அடைப்புக்கு உட்படுத்தியுள்ளார். அன்றைய தேதியில் மற்ற சிறார் இளைஞர் நீதிமன்றத்திற்கு உரிய பதிவிற்கு பின்பு அனுப்பி கடந்த 11.09.2018 ஆம் தேதி சிறப்பு சார்பாளர் கனகராஜ் என்பவர் விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **படிவம் 91 அசாஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரிகள் திருட வேண்டும் என்ற நோக்கத்தில் மூவரும் ஒன்று சேர்ந்து இருசக்கர வாகனத்தில் இந்திய வழக்கில் தட்டப்பார்வை 379 உ/இ 34 இதச ஆக மாற்றம் செய்து சட்டமாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சம்பவம் உண்மை என தெரிந்தபடியால் 1வது எதிரி மீது 379 உ/இ 34 பிரிவாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

மேற்படி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம், அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் போன்ற ஆவணங்கள் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கினை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.